2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 295, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

295—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***22234—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், பிச்சாவரம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், பிச்சாவரம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தத் தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. இல்லை என்று சொல்வதற்கு எங்களுக்கு மனம் இல்லை; இருந்தாலும் விதிகளில் அதற்கு இடம் இல்லை. ஆகவே தரம் உயர்த்த வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்திருக்கிற பிச்சாவரம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு இல்லையென்று சொல்வதற்கு மனம் இல்லாவிட்டாலும், அதை உயர்த்துவதற்கான தகுதி இல்லையென்கிற அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அந்தக்*

[2013 ஏப்ரல் 22

கிராமம் கடலோர கிராமம். அந்த கிராமத்திலிருந்து உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 10 கிலோ மீட்டருக்கு தள்ளி இருக்கிற சிதம்பரம் நகரத்திற்குத்தான் செல்ல வேண்டும், இன்னொரு மூன்றரை கிலோ மீட்டருக்கு பக்கத்திலிருக்கிற தாண்டவராயன் சோழகம்பேட்டை என்ற கிராமத்திற்குச் செல்ல வேண்டும். பிச்சாவரத்தைச் சுற்றி 13 கிராமங்களில் 9 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இங்குள்ள மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு செல்லவேண்டுமென்று சொன்னால் 10 அல்லது 12 கிலோ மீட்டர் தூரம் இருக்கிற சிதம்பரம் நகரத்திற்குச் செல்லவேண்டிய இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான இடவசதி அந்தப் பள்ளிக்கு அருகிலேயே இருக்கிறது. சர்வே எண் 9–ல், 2.2 ஏக்கர் 4 சென்ட் அரசு நத்தம் புறம்போக்கு நிலமும் உள்ளது.

முற்பகல் 11–20

எனவே, இவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு அந்தப் பின்தங்கிய மீனவ மாணவர்கள் 10 கிலோ மீட்டர் பயணம் செய்து உயர்நிலைப் பள்ளியை சென்றடையக்கூடிய இக்கட்டான நிலைமையைக் கருத்தில்கொண்டு, பிச்சாவரம் கிராமத்திலிருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு என்ன விதிகள் அங்கு இடம் தரவில்லை என்று சொன்னாலும் அவற்றிலுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தருவதற்கு அந்தக் கிராம மக்கள் தயாராய் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இதனை தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 கி.மீ. தூரம் சென்றால் ஒரு பள்ளி இருப்பதாக குறிப்பிட்டார். பக்கத்தில் 3 கி.மீ. தூரத்தில் ஒரு பள்ளி இருப்பதை வசதியாக மறந்துவிட்டார். 3 கி.மீ. தூரத்தில் தாண்டவராயன் சோழகம்பேட்டையில் அரசு உயர்நிலைப் பள்ளி நல்லமுறையில்

2013 ஏப்ரல் 22]

செயல்பட்டு வருகிறது. இருப்பினும் ஒரு பள்ளியை புதிதாக உயர்நிலைப் பள்ளியாகத் தொடங்க வேண்டும் என்று சொன்னால் 5 கி.மீ. சுற்றளவில் வேறு பள்ளிகள் இருக்கக்கூடாது. அவற்றோடு மாத்திரமல்லாமல், அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்று சொன்னால் 8 ஆம் வகுப்பு மாணவர்கள் குறைந்தபட்சம் 70 மாணவர்களாவது அந்தப் பள்ளியில் இருக்க வேண்டும். அடுத்த நிபந்தனை, 1 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையைச் செலுத்தியிருக்க வேண்டும். போதுமான இட வசதி வேண்டும். ஆனால், இந்தப் பள்ளியில் 28 மாணவர்கள்தான் எட்டாம் வகுப்பில் படித்து வருகிறார்கள். அவற்றோடு மாத்திரமல்லாமல், போதிய பங்குத் தொகையைச் செலுத்தவில்லை. தற்போது துறை தெரிவித்திருக்கின்றபடி 4 சென்ட் நிலம் மாத்திரமே அங்கு இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பது நத்தம் புறம்போக்கில் இடம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆக, இந்தத் துறையின் ஆய்வின் அடிப்படையில் இந்த நிபந்தனைகளை சரியாகப் பூர்த்தி செய்வார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மனித நேயமும், மானுடப் பற்றும், கருணையும், காருண்யமும் கொண்டிருக்கின்ற அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல், அந்தப் பள்ளியில் 8 ஆம் வகுப்பில் 28 மாணவர்கள் படிக்கிறார்கள் என்பது உண்மைதான். பொதுவாக, பெற்றோர்கள் 1 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரையிலும், 5 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பிலிருந்து அதற்குமேல் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று போவதற்குப் பதிலாக, எந்தப் பள்ளியில் சேர்ந்தால் தொடர்ந்து தங்களது பிள்ளைகள் படிக்க முடியுமோ, அந்தப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து பிள்ளைகளைப் பெற்றோர் அனுப்புகிறார்கள். ஆகவேதான், இங்கே தொடர்ந்து உயர்நிலைப் பள்ளியில் படிப்பதற்கு வாய்ப்பில்லாத காரணத்தினால்தான் அதிகமான பெற்றோர் இந்தப் பள்ளியில் விரும்பி சேர்ப்பதற்கு

வாய்ப்பில்லாமல் பக்கத்தில் இருக்கின்ற சிதம்பரம் நகரத்திற்கு செல்வதைத்தான் விரும்புகிறார்கள். 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய தாண்டவராயன் சோழகன்பேட்டை கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி இருந்தாலும், அந்த 3 கிலோ மீட்டரை விட்டுவிட்டால் அடுத்து 12 கிலோ மீட்டர் தூர இடைவெளியில் உயர்நிலைப் பள்ளிகளே இல்லாத காரணத்தினால்தான் இந்தப் பள்ளியை தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு 1 இலட்சம் ரூபாய் நிதி கட்டுவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். நிலமும் அங்கு தயாராக இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, இந்த நிதியாண்டிலோ, அல்லது அடுத்து வருகிற நிதியாண்டுகளில் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தி பின்தங்கிய பகுதி மக்களைச் சார்ந்திருக்கக்கூடிய குழந்தைகள் உயர்நிலைப் பள்ளி, அடுத்து மேல்நிலைப் பள்ளியில் படிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் மைய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் 9 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவர்கள் நலன் கருதி அனைவருக்கும் இடைநிலைக் கல்வி அளிப்பது என்ற இலக்கை எட்டுவதற்காகவும், தொடக்கக் கல்வி முடித்தவர்களின் இடைநிற்றலை தவிர்ப்பதற்காகவும் தொடங்கப்பட்டது. 11—வது ஐந்தாண்டு திட்டத்தில் 75 சதவிகிதம் மத்திய அரசின் பங்கும், 25 சதவிகிதம் மாநிலப் பங்கும் என்றும், 12—வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 50 சதவிகிதம் மத்திய அரசின் பங்கு, 50 சதவிகிதம் மாநில அரசின் பங்கு என்ற விகிதத்திலும் செலவுத் தொகைகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. ஆனால், தற்போது 2013–2014 ஆம் ஆண்டிற்கான மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தினுடைய திட்ட ஒப்புதல் குழு, அதாவது Project Approval Board of RMSA under Ministry of Human Resource Development சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற செய்தி என்னவென்றால்—நடுநிலைப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாகத்

2013 ஏப்ரல் 22]

தரம் உயர்த்துவதற்கு வழிவகை செய்து தரப்படவில்லை என்ற செய்தியை மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இருந்தபோதிலும், மத்திய அரசு கைவிரித்தாலும்கூட, தாயுள்ளம் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பரிசீலித்து வருகிறார்கள் என்ற நல்ல செய்தியையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நியாயமான கோரிக்கை விதிகளுக்குட்பட்டிருக்கின்ற கோரிக்கையாக இருப்பின் அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்வதில் முதன்மையாக இருக்கக்கூடிய தமிழக அரசாங்கத்தினுடைய தலைசிறந்த முதலமைச்சர், இன்றைய முதல்வராகவும், நாளைய பிரதமராகவும் வரக்கூடிய வல்லமை படைத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய முறையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 296, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

296—

இதய நோய் சிகிச்சைப் பிரிவு

***14984 திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது.